கண்டிப்பாக தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ச. சிவகுமார் அவர்கள்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மயிலம் சட்டமன்றத் தொகுதியில், வல்லம் ஒன்றியத்தில் உள்ள பள்ளிக்குளம் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தித் தரப்படுமா? அதற்கு உரிய பங்குத் தொகை செலுத்தி 5 ஆண்டுகள் ஆகின்றன. அதற்குத் தேவையான இடங்கள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி தருவார்களா என அறிய விரும்புகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மயிலம் சட்டமன்ற உறுப்பினர் மட்டுமல்ல, இதேபோன்று தரமுயர்த்துதல் தொடர்பாக மற்ற சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை மனுக்களைக் கொடுத்திருந்தாலும், அக்கோரிக்கைகள் அரசு வகுத்துள்ள நெறிமுறைகளுக்குள் வரும்பட்சத்தில், கண்டிப்பாக அவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

சமுதாயக் கூடம்

***1801—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன.

முற்பகல் 10–30

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய சமுதாயக் கூடம் கட்டுவது குறித்து ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு ஆகியவற்றை ஆய்வு செய்து முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட வடமாம்பாக்கம் ஊராட்சி, மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர் காலனியிலும், அதையொட்டியுள்ள சீனிவாச நகர் பகுதியிலும் சுமார், 300–க்கும் மேற்பட்ட ஆதி திராவிட குடும்பங்கள் வசித்து வருகின்றன. அவர்கள் எல்லோரும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்ந்துவரக்கூடியவர்கள். அந்த மக்கள் சுபகாரியங்கள் செய்வதற்கும், சமுதாய நிகழ்ச்சிகள் செய்வதற்கும் சமுதாயக் கூடம் கோரி வருகின்றார்கள். 1983 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சியில், ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியபோது. . .*

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வி, சமுதாய நலக் கூடம் கட்டுவது. அது சம்பந்தமாகக் கேளுங்கள்.*

திரு. சு. ரவி: *இல்லை, இல்லை. சமுதாயக் கூடம் கட்டுவதற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இடம் இருக்கிறது, கட்டித் தருவீர்களா என்று கேளுங்கள்.*

திரு. சு. ரவி: *சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 40 சென்ட் பொது இடம்,* Survey No.*470/1-ல் தயாராக இருக்கிறது. அந்த மக்களுடைய நீண்ட காலக் கோரிக்கை; ஆகவே, அந்தப் பகுதியில் ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கிராமத்தில் 300 குடும்பங்கள் இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். கிராமத்தில் இருக்கின்ற மொத்த மக்கள் தொகையில் 50 சதவிகித அளவிற்கு ஆதி திராவிடர் மக்கள் இருக்க வேண்டும். அதேமாதிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு எங்கேயும் சமுதாய நலக் கூடம் இல்லாமல் இருந்தால், அதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். அதேபோல், சமுதாய நலக் கூடம் கட்டுவதற்குத் தேவையான இடம் இருக்கிறது என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நிதி ஒதுக்கீடும் தேவைப்படும். இவை நான்கையும் முழுமையாக ஆராய்ந்து பார்த்து, தேவைப்படும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி முன்னுரிமை அடிப்படையில் சமுதாய நலக் கூடம் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கிராமத்தில் வசிக்கக்கூடிய 300 குடும்பங்களும் ஆதி திராவிடர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள்தான். இடமும் தயாராக இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சமுதாய நலக் கூடத்தைக் கட்டித் தர வேண்டும். அதேபோல, பொதுவாக ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்குச் செல்கின்றபோது ஆதி திராவிட மக்கள் முதன்மையான ஒரு கோரிக்கையை வைக்கின்றார்கள். 'எங்களுடைய பகுதியிலே ஒரு சமுதாயக் கூடம் கட்டித் தரவேண்டும், சுபகாரியங்கள் நடத்த வேண்டும், சமுதாய நிகழ்ச்சிகள் எல்லாம் நடத்துவதற்கு எங்களுக்கு சமுதாயக் கூடம் வேண்டும்' என்று கேட்கின்றார்கள். ஆகவே, எங்கெல்லாம் ஆதி திராவிட மக்கள் அதிகமாக வசிக்கிறார்களோ, எங்கே அடர்த்தியாக இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரு சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டும். அதேநேரத்திலே அந்த பகுதியிலே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுக்கு முன்னுரிமை அடிப்படையிலே கட்டித் தரப்படும் என்று சொல்லிவிட்டார்கள். அதனால் நன்றி சொல்லி அமருங்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான ஒரு கோரிக்கை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுவான கோரிக்கைகளையெல்லாம் மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது பேசலாம். கேள்வியை முடித்து விடுங்கள்.*

திரு. சு. ரவி: *முடித்துவிடுகிறேன். பொதுவான ஒரு கோரிக்கைதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கேள்வியை முடித்துவிடுங்கள். எல்லா இடங்களுக்கும் என்று கேட்காமல் கேள்வியை முடியுங்கள்.*

திரு. சு. ரவி: *அதிகமான அளவிலே ஆதி திராவிட மக்கள் வசிக்கக்கூடிய பகுதியிலே, சமுதாயக் கூடம் கட்டுவதற்கு இடம் இல்லை என்று சொல்கின்றார்கள். அரசு நிலத்தை வாங்கி, ஆதி திராவிட மக்கள் அடர்த்தியாக வசிக்கின்ற பகுதிகளிலெல்லாம் சமுதாயக் கூடம் கட்டித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2021 செப்டம்பர் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மக்கள் தொகையின் எண்ணிக்கை, அருகிலிருக்கும் சமுதாயக் கூடங்களுக்கு இடையேயுள்ள தூரம் ஆகியவற்றைக் கணக்கில் வைத்துதான் கட்டிக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு வருடமும் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைக் கொண்டு, அனைத்து மாவட்டங்களுக்கும் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க இயலாது. தேவைப்படும்பட்சத்தில், முன்னுரிமையின் அடிப்படையில் இதைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

கொரோனா நோய் தொற்றுக்கான booster dose வழங்குவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. கொரோனா நோய் தொற்றுக்கான* booster dose *வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எடப்பாடி* K. *பழனிசாமி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், டாக்டர் சி. விஜயபாஸ்கர் ஆகியோர் விதி 55–ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து ஒருவர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா நோய்த் தொற்று தொடங்கிய நாள்முதல்,*